12.01.2017

தினத் தந்தி
DAILY THANTHI
வெல்க தமிழ்

## கரும்பு விலை கடந்த ஆண்டை விட குறைந்தது



சென்னை,

**கரும்பு வரத்து**

பொங்கல் பண்டிகையையொட்டி , சென்னை கோயம்பேடு மார்க்கெட்டுக்கு மதுரை , மேலூர், தேனி, பெரியகுளம், திண்டுக்கல், ஒட்டன்சத்திரம், கடலூர், சிதம்பரம், பண்ருட்டி உள்பட பல இடங்களில் இருந்து லாரி , லாரியாக கரும்புகள் கொண்டு வரப்பட்டுள்ளன.

இதில், 10 அடி நீளம் உள்ள தேனி , பெரியகுளம் கரும்பு கட்டு(எண்ணிக்கை- 15) ரூ.400 முதல் ரூ. 500 வரைக்கும், 8 அடி நீளமுள்ள மதுரை , மேலூர் கரும்புக்கட்டு(எண்ணிக்கை-15) ரூ.300 முதல் ரூ. 350 வரைக்கும், 5 அடி நீளமுள்ள சிதம்பரம், கடலூர், பண்ருட்டி கரும்புக்கட்டு(எண்ணிக்கை- 20) ரூ.150 முதல் ரூ. 200 வரைக்கும் விற்பனை செய்யப்படுகிறது.

பணப்புழக்கம் இன்மை , பருவமழை ஏமாற்றம் காரணமாக கரும்பு விலை கடந்த ஆண்டை விட வெகுவாக குறைந்துள்ளதாக வியாபாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

**விற்பனை மந்தம்**

இதுகுறித்து வியாபாரிகள் சிலர் கூறியதாவது:-

கடந்த ஆண்டு பொங்கல் பண்டிகையின்போது தேனி கரும்பு ரூ. 800-க்கும், மதுரை கரும்பு ரூ. 500-க்கும், பண்ருட்டி கரும்பு ரூ. 300-க்கும் விற்பனை செய்யப்பட்டது. பொங்கல் பண்டிகைக்கு 3 நாட்கள் முன்னதாகவே கரும்பு வியாபாரம் மும்முரமாக நடைபெறுவது வழக்கம்.

ஆனால் இந்த ஆண்டு விற்பனை மந்தமாக காணப்படுகிறது. தொடர்ந்து விற்பனை மந்தமாக இருந்தால் கரும்புவிலை குறைவதற்கும் , விற்பனை அதிகரித்தால் கரும்புவிலை உயர்வதற்கும் வாய்ப்பு உள்ளது.

இவ்வாறு வியாபாரிகள் கூறினர்.

**மஞ்சள், தென்னங்குலை**

சென்னை மற்றும் புறநகரில் உள்ள சில்லரை வியாபாரிகள் குறைந்தளவே கரும்பு வாங்குவதற்கு வந்திருந்தனர். கரும்புகள் கடந்த ஆண்டு போன்று இல்லாமல் மிகவும் மெல்லியதாக இருப்பதாக சில்லரை வியாபாரிகள் கூறினர்.

மஞ்சள் குலை , தென்னங்குலை போன்றவற்றின் வரத்தும் கோயம்பேடு மார்க்கெட்டுக்கு அதிகரித்துள்ளது. ஒரு ஜோடி மஞ்சள் குலை ரூ. 20-க்கும், ஒரு கட்டு(எண்ணிக்கை-10) ரூ.100-க்கும், தென்னங்குலை-ரூ.10-க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

## திண்டுக்கல் மாவட்டம் முழுவதும் வறட்சியால் பாதித்த பயிர்கள் குறித்து கணக்கெடுப்பு பணி தீவிரம்



திண்டுக்கல்,

வறட்சியால் பயிர்கள் பாதிப்பு

தமிழகத்தில் பருவமழை பொய்த்து போனதால் , வறட்சி நிலவுகிறது. விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டு உள்ளது. சாகுபடி செய்துள்ள பயிர்கள் கருகி வருகின்றன. மாநிலத்தின் பல பகுதிகளில் விவசாயிகள் தற்கொலை செய்த சம்பவங்களும் ஆங்காங்கே நடக்கின்றன. இதையடுத்து கடந்த சில நாட்களுக்கு முன்பு அமைச்சர்கள் தலைமையிலான குழுவினர் மாநிலம் முழுவதும் பார்வையிட்டு ஆய்வு செய்தனர்.

மேலும் வேளாண்மைத்துறை , தோட்டக்கலைத்துறை, வருவாய்த்துறை அதிகாரிகள் கொண்ட குழுவினர் குறிப்பிட்ட கிராமங்களை தேர்வு செய்து ஆய்வு செய்தனர். அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் 39 கிராமங் களில் வறட்சியால் பாதிக்கப்பட்ட பயிர்களை செயற்கை கோள் உதவியுடன் நவீன தொழில்நுட்ப வசதியுடன் புகைப்படம் எடுத்து ஆய்வு செய்யப்பட்டது.

கணக்கெடுப்பு பணி

இந்த நிலையில் தமிழகத்தில் அனைத்து மாவட்டங்களும் வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதியாக அறிவிக்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்தது. மேலும் வறட்சியால்

பாதித்த பயிர்களுக்கு நிவாரண தொகை அளவும் அறிவிக்கப்பட்டு இருக்கிறது. இதைத் தொடர்ந்து விவசாய பயிர்கள் குறித்த கணக்கெடுப்பு பணி மாநிலம் முழுவதும் தீவிரப்படுத்தப்பட்டு இருக்கிறது.

திண்டுக்கல் மாவட்டத்தை பொறுத்தவரை வறட்சியால் பாதித்த பயிர்கள் குறித்து முன்கூட்டியே கணக்கெடுப்பு நடத்த கலெக்டர் டி.ஜி.வினய் உத்தரவிட்டு இருந்தார். அதன்படி மாவட்டம் முழுவதும் கிராம நிர்வாக அலுவலர்கள் , வேளாண்மை அலுவலர்கள் வறட்சியால் பாதித்த பயிர்கள் குறித்து கணக்கெடுப்பு பணியை தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர்.

விவசாயி விவரங்கள்

ஒவ்வொரு வருவாய் கிராம அளவிலும் கிராம அடங்கல் பதிவேடு பராமரிக்கப்பட்டு வருகிறது. அதில் அந்த பகுதியில் சாகுபடி செய்யப்பட் டுள்ள பயிர்களின் விவரங் கள் , பரப்பளவு பதிவு செய்யப்படும். அதை கொண்டு வறட்சியால் பாதிக் கப்பட்ட பயிர்கள் குறித்து கணக்கெடுப்பு நடத் தப்பட்டு வருகிறது. அதில் விவசாயி பெயர் , முகவரி, செல்போன் எண், வங்கி கணக்கு எண், ஆதார் எண், நிலத்திற்கான சர்வே எண், பயிர், சாகுபடி பரப்பளவு , பாதிப்பு விவரங்கள் சேகரிக் கப்பட்டு வருகின்றன. மேலும் பயிர் சேதத்தை பொறுத்தவரை 33 சதவீதம், 33 முதல் 50 சதவீதம், 50 சதவீதத்திற்கு மேல் என 3 விதமாக அளவீடு செய்யப்பட்டு வருகிறது. இந்த வாரத்திற்குள் கணக்கெடுப்பு பணியை முடிக்க உத்தரவிடப்பட்டு இருக்கிறது.

## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தஞ்சைக்கு கரும்பு , மஞ்சள்கொத்து வரத்து அதிகரிப்பு



தஞ்சாவூர்,

பொங்கல் பண்டிகை

தமிழர்களின் பண்டிகைகளுள் முக்கியமான பண்டிகை பொங்கல் பண்டிகை. விவசாயிகள் பொங்கல் பண்டிகை அன்று புத்தாடை உடுத்தி புதுப்பானையில் பொங்கலிட்டு கொண்டாடுவார்கள். இந்த பொங்கல் பண்டிகையில் முக்கிய இடத்தை பிடித்து இருப்பது கரும்பு , மஞ்சள்கொத்து, வாழைப் பழம் தான். பொங்கல் பண்டிகை தொடங்குவதற்கு 10 நாட்களுக்கு முன்னதாகவே கரும்பு விற்பனைக்கு வரும். மஞ்சள்கொத்து, இஞ்சிகொத்து, வாழைத்தார் போன்றவை ஒரு வாரத்திற்கு முன்னதாக விற்பனைக்கு வரும்.

பொங்கல் பண்டிகையின் போது புதுமணத்தம்பதிகளுக்கு சீர் வரிசையாக பொங்கல் வைப்பதற்கு தேவையான பொருட் கள் , கரும்பு, மஞ்சள்கொத்து, வாழைத்தார் போன்றவைகளை கொடுப்பார்கள். தஞ்சை காமராஜர் மார்க்கெட்டிற்கு மஞ்சள்கொத்து, இஞ்சி கொத்து வரத்து அதிகரித்துள்ளது. பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 2 நாட்கள் மட்டுமே இருப்பதால் தற்போது விற்பனை அதிகரிக்க தொடங்கி விட்டது.

கரும்பு கட்டு ரூ.200

தஞ்சைக்கு கல்யாணபுரம் , திருக்காட்டுப்பள்ளி, சூரக்கோட்டை, பூதலூர் போன்ற பகுதிகளில் இருந்து கரும்பு அறுவடை செய்யப்பட்டு விற்பனைக்கு கொண்டு வந்து குவித்து வைக்கப்பட்டுள்ளது. தற்போது 10 கரும்புகள் கொண்ட 1 கட்டு ரூ.200 முதல் ரூ.300 வரை விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கரும்பு ரூ. 30-க்கு விற்பனை செய்யப் படுகிறது.

தஞ்சை சிவகங்கை பூங்கா, மருத்துவகல்லூரி சாலை, உழவர் சந்தை, கீழவாசல், நாகை சாலை, மாரியம்மன்கோவில் சாலை , கீழராஜவீதி, சுற்றுலா மாளிகை உள்ளிட்ட பகுதிகளில் கரும்புகள் அதிக அளவில் குவித்து வைக்கப்பட்டு விற்பனை நடைபெற்று வருகிறது.

மஞ்சள் கொத்து

இதே போல் மஞ்சள்கொத்து வரத்தும் அதிகமாக உள்ளது. தஞ்சை காமராஜர் மார்க்கெட்டில் ஒரு மஞ்சள் கொத்து ரூ. 20 முதல் ரூ. 30 வரை விற்பனை செய்யப்படுகிறது. இதே போல் கீழவாசல் பகுதியிலும் மஞ்சள்கொத்து விற்பனை செய்யப்படுகிறது. இருப்பினும் கடந்த ஆண்டைப்போலவே இந்த ஆண்டும் விற்பனை அதிகரித்துள்ளது.

இந்த ஆண்டு தண்ணீர் பற்றாக்குறை காரணமாக நடுக்காவேரி , திருவையாறு பகுதிகளில் மஞ்சள் உற்பத்தி அதிக அளவில் இல்லை. தற்போது தஞ்சைக்கு கும்பகோணம், தாராசுரம் பகுதிகளில் இருந்து மஞ்சள் கொத்து விற்பனைக்கு வந்துள்ளன. இதே போல் அணைக்கரை பகுதிகளில் இருந்து இஞ்சிக்கொத்தும் விற்பனைக்கு கொண்டு வரப்பட்டுள்ளன. 1 இஞ்சிக்கொத்து ரூ. 25-க்கு விற்பனை செய்யப்படுகிறது. 3 இஞ்சிக்கொத்து சேர்த்து ரூ. 40-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

வாழைத்தார்

வாழைத்தார் விலை கடந்த ஆண்டைப்போல தான் இந்த ஆண்டும் உள்ளது. வாழைத்தார் ஒன்று ரூ. 150 முதல் விற்பனை செய்யப்படுகிறது. நல்ல வாழைத்தார் ரூ.400 முதல் ரூ. 550 வரை விற்பனை செய்யப்படுகிறது. தஞ்சை மாவட்டத்தில் திருவையாறு, அய்யம்பேட்டை, நடுக்காவேரி போன்ற பகுதிகளில் வாழைத்தார் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. ஆனால் இந்த பகுதிகளில் விளையும் வாழைத்தாரை விட தூத்துக்குடி பகுதியில் விளையும் வாழைத்தாருக்குத்தான் அதிக மவுசு உள்ளது.

தஞ்சை காமராஜர் மார்க்கெட்டிற்கு தூத்துக்குடியில் இருந்து தான் அதிக அளவில் வாழைத்தார் விற்பனைக்கு வருகின்றன. இந்த வகை வாழைத்தாரைத்தான் பொதுமக்களும் அதிக அளவில் வாங்கி செல்கிறார்கள். கடந்த ஆண்டைப்போல இந்த ஆண்டும் 1 லோடு வாழைத்தார் ரூ. 1 லட்சத்து 30 ஆயிரம் முதல் ரூ. 1 லட்சத்து 40 ஆயிரம் வரை விற்பனை செய்யப்படுகிறது. 1 லோடு லாரியில் 550 முதல் 600 வாழைத்தார்கள் இருக்கும்.

விற்பனை குறைந்தது

இது குறித்து வாழைத்தார் மொத்த வியாபாரி பத்மநாபன் கூறுகையில் , "கடந்த ஆண்டை விட இந்த ஆண்டு வாழைத்தார் வரத்து குறைந்துள்ளது.

வறட்சி காரணமாக விளைச்சல் குறைவாக உள்ளது. தற்போது ஒரு வாழைத்தார் ரூ.150 முதல் ரூ. 550 வரை விற்பனை செய்யப்படுகிறது. தூத்துக்குடியில் இருந்து தஞ்சை மார்க்கெட்டிற்கு 4 லாரிகளில் வாழைத்தார் விற்பனைக்கு வருகிறது. பொங்கல் பண்டிகைக்கு 1 வாரத்துக்கு முன்பு 10 முதல் 15 லாரிகளில் வாழைத்தார் விற்பனைக்கு வரும்.

ஆனால் தற்போது வரத்து குறைந்துள்ளது. வாழைப்பழங்களும் சிறிய அளவிலேயே உள்ளன. தஞ்சைகாமராஜர் மார்க்கெட்டில் இருந்து தஞ்சை மாவட்டத்தில் உள்ள பல்வேறு பகுதிகளுக்கும் , மன்னார்குடி, கூத்தாநல்லூர், லட்சுமாங்குடி உள்ளிட்ட பல்வேறு பகுதிகளுக்கும் வாழைத்தார் விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. மேலும் வாழைத்தார் விற்பனையும் வெகுவாக குறைந்துள்ளது."என்றார்.

## பொங்கல் பண்டிகையை முன்னிட்டு செவ்வந்தி பூக்கள் அறுவடை பணி தீவிரம்



அய்யம்பேட்டை,

செவ்வந்தி பூக்கள்

தஞ்சை மாவட்டம் அய்யம்பேட்டை அருகே உள்ள பூஞ்சேரி , மேல உத்தமநல்லூர் , மாத்தூர், ஈச்சங்குடி ஆகிய ஊர்களில் அதிகளவில் செவ்வந்தி பூக்கள்

பயிரிடப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஆங்கில புத்தாண்டு முதல் பொங்கல் பண்டிகை வரை அறுவடை செய்யும் வகையில் செவ்வந்தி பூக்கள் இப்பகுதியில் பயிர் செய்யப்படுகிறது. தற்போது பொங்கல் பண்டிகைக்கு இன்னும் 2 நாளே உள்ளதால், அய்யம்பேட்டை பகுதியில் செவ்வந்தி பூக்கள் அறுவடை பணி நடைபெற்று வருகிறது.

செவ்வந்தி பூக்கள் சாகுபடி குறித்து மேலஉத்தம நல்லூரைச் சேர்ந்த விவசாயிகள் கூறியதாவது:-

அய்யம்பேட்டை பகுதியில் கடந்த சில நாட்களுக்கு முன்பே செவ்வந்தி பூக்களின் அறுவடை பணி தொடங்கிவிட்டது. இருப்பினும் பொங்கலுக்கு இன்னும் 2 நாளே உள்ளதால் அறுவடை பணிகள் தீவிரமடைந்துள்ளன. இங்கு விளையும் செவ்வந்தி பூக்கள் தஞ்சை, கும்பகோணம், திருச்சி, திருவாரூர், நாகப்பட்டினம் உள்பட பல்வேறு பகுதிகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது.

விவசாயிகள் எதிர்பார்ப்பு

ஒரு கிலோ செவ்வந்தி பூ ரூ. 100 முதல் ரூ. 120 வரை விற்பனை செய்தால் தான் விவசாயிகளுக்கு கட்டுபடியான விலை கிடைக்கும். ஆனால் தற்போது சேலம், ஓசூர், துவரங்குறிச்சி ஆகிய பகுதிகளில் இருந்து செவ்வந்தி பூக்கள் அதிகளவில் விற்பனைக்கு கொண்டு வருவதால், இங்கு விளையும் பூக்களின் விலை வீழ்ச்சி காணப்படுகிறது. அய்யம்பேட்டை பகுதியில் விளையும் செவ்வந்தி பூக்கள் இப்போது 1 கிலோ ரூ.20 முதல் ரூ.30 வரை மட்டுமே விற்பனையாகிறது. பொங்கலுக்கு இன்னும் 2 நாளே உள்ளதால் செவ்வந்தி பூக்களுக்கு கூடுதல் விலை கிடைக்கும் என்று எதிர்பார்த்துள்ளோம். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு கூடுதல் தண்ணீர் திறப்பு



ஊத்துக்கோட்டை,

<u>தண்ணீர் திறப்பு</u>

கிருஷ்ணா நதி நீர் பங்கீட்டு திட்டத்தின்படி கண்டலேறு அணையில் இருந்து கடந்த நவம்பர் மாதம் 21–ந் தேதி திறக்கபட்ட தண்ணீர் டிசம்பர் மாதம் 11–ந் தேதி நிறுத்தப்பட்டது. நவம்பர் மாதம் 21–ந் தேதி முதல் டிசம்பர் மாதம் 11–ந் தேதி வரை தமிழகத்துக்கு 0.99 டி.எம்.சி. தண்ணீர் கிடைத்தது. இந்த நிலையில் வடகிழக்கு பருவ மழை பொய்த்து சென்னைக்கு குடிநீர் வழங்கும் பூண்டி , புழல், சோழவரம், செம்பரம்பாக்கம் ஏரிகளில் தண்ணீர் மட்டம் வெகுவாக குறைந்து வருகிறது. தற்போது இருப்பு உள்ள தண்ணீரை கொண்டு சென்னை வாழ் மக்களுக்கு ஒரு மாதம் வரைதான் குடிநீர் வினியோகம் செய்ய முடியும்.

இதனை கருத்தில் கொண்டு கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறந்து விடும்படி முதல் – அமைச்சர் ஓ.பன்னீர்செல்வம் ஆந்திர முதல் – மந்திரி சந்திரபாபு நாயுடுவுக்கு கடிதம் எழுதினார். இந்த கோரிக்கையை ஏற்று கடந்த திங்கட்கிழமை கண்டலேறு அணையில் இருந்து பூண்டி ஏரிக்கு தண்ணீர் திறக்கப்பட்டது. முதலில் வினாடிக்கு 1,000 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது.

கூடுதல் தண்ணீர்

நேற்று காலை கூடுதலாக வினாடிக்கு 180 கனஅடி வீதம் தண்ணீர் திறக்கப்பட்டது. அதாவது வினாடிக்கு மொத்தம் 1,180 கனஅடியாக திறந்து விடப்பட்ட தண்ணீர் நேற்று காலை கண்டலேறு அணையில் இருந்து 45 கிலோ மீட்டர்தூரம் பாய்ந்து வந்து கொண்டிருந்ததாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த தண்ணீர் மேலும் 107 கிலோ மீட்டர் தூரம் கடந்து தமிழக எல்லையில் உள்ள ஊத்துக்கோட்டை ஜீரோ பாயிண்டிற்கு வந்து சேர உள்ளது. வருகிற ஞாயிற்றுக்கிழமை தண்ணீர் தமிழக எல்லையை வந்தடைய வாய்ப்பு உள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் தெரிவித்தனர்.

பூண்டி ஏரியின் உயரம் 35 அடி. 3 ஆயிரத்து 231 மில்லியன் கனஅடி தண்ணீரை சேமித்து வைக்கலாம். நேற்று காலை 6 மணி நிலவரப்படி பூண்டி ஏரியின் நீர் மட்டம் 23 அடியாக பதிவானது. 578 மில்லியன் கனஅடி தண்ணீர் இருப்பு உள்ளது.

பூண்டி ஏரியில் இருந்து மெட்ரோ வாட்டர் போர்டுக்கு பேபி கால்வாயில் 32 கனஅடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது.

தினமலர்
உண்மையின் உரைகல்

**5 ஆண்டுகளுக்கு பின் பருப்பு விலை வீழ்ச்சி**

சேலம்: "ஐந்து ஆண்டுகளுக்கு பின், பருப்பு வகைகள் விலை வீழ்ச்சியை சந்தித்துள்ளது, வியாபாரிகளுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தி உள்ளது," என, வணிகர் சங்க பேரமைப்பின், சேலம் மாவட்ட தலைவர் பெரியசாமி தெரிவித்தார்.

தமிழகத்தின் பருப்பு தேவையை, 60 முதல், 70 சதவீதம், மஹாராஷ்டிரா, குஜராத், கர்நாடகா மாநிலம், குல்பர்க்கா ஆகியவை பூர்த்தி செய்கின்றன. அந்த மாநிலங்களில் இருந்து, தமிழகத்துக்கான பருப்பு வரத்து சரிந்தால், விலை உயர்வது வழக்கம். 2011ல்,

பருப்பு வரத்து அதிகரித்து, கிலோ, சராசரியாக, 70 முதல், 80 ரூபாய் வரை விற்கப்பட்டது. பின், பருப்பு விலை உயர்ந்து, 2016ல், இருமடங்கானது.

இந்நிலையில், வடமாநிலங்கள், கர்நாடகாவில் இருந்து பயிறு, பருப்பு வகைகளின் வரத்து அதிகரித்ததால், தற்போது விலை வீழ்ச்சி ஏற்பட்டு, 2011 ஜனவரியில் விற்ற விலைக்கு, விற்கப்படுகிறது. நேற்று, மொத்த விலையில், துவரம் பருப்பு முதல் ரகம், கிலோ, 75 ரூபாய், இரண்டாம் ரகம், 70 ரூபாய், மூன்றாம் ரகம், 68 ரூபாய்க்கு விற்றது. அதேபோல், பாசி பருப்பு முதல் ரகம், கிலோ, 72 ரூபாய், இரண்டாம் ரகம், 70 ரூபாய், உளுந்தம்பருப்பு முதல் ரகம், 90 ரூபாய், இரண்டாம் ரகம், 85 ரூபாய், மூன்றாம் ரகம், 80 ரூபாய்க்கும் விற்றது. இந்த விலை, 2011 ஜனவரியில் விற்கப்பட்ட விலை என்பதால், வியாபாரிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

தமிழ்நாடு வணிகர் சங்க பேரமைப்பின், சேலம் மாவட்ட தலைவர் பெரியசாமி கூறியதாவது: பருப்பு விலை சரிவுக்கு, மத்திய, மாநில அரசுகள், பதுக்கல் வியாபாரிகளை ஒடுக்கி, குடோன், மில்களில் சோதனை மேற்கொண்டதே காரணம். கடந்த ஆண்டு வரை, வெளிமாநிலங்களில் இருந்து விற்பனைக்கு வரும் பயிறு, பருப்புகளை, மொத்த வியாபாரிகள், மில் அதிபர்கள் பதுக்கி, மார்க்கெட்டில் செயற்கை தட்டுப்பாட்டை ஏற்படுத்தி, விலை உயர்வை அரங்கேற்றி, ஆதாயம் தேடிக்கொண்டனர். தற்போது, பயிறு, பருப்புகள் பதுக்கல் இன்றி, விற்பனைக்கு வருவதால், விலை சரிந்து, 2011ல் விற்ற விலையில், தற்போது விற்கப்படுகிறது. பருப்பை போல், பிற அத்யாவசிய பொருட்களின் பதுக்கல் தடுக்கப்படும்பட்சத்தில், அவற்றின் விலையில் சரிவு ஏற்பட வாய்ப்புள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

**பொங்கல் பண்டிகையை முன்னிட்டு தர்மபுரியில் பரங்கிக்காய் விற்பனை ஜோர்**

தர்மபுரி: பொங்கல் பண்டிகை தேவைக்காக, திருவண்ணாமலையில் இருந்து தர்மபுரிக்கு, பரங்கிக்காய் அதிகளவில் விற்பனைக்கு வந்துள்ளது.

தர்மபுரி மாவட்டத்தில், பொங்கல் பண்டிகை அன்று, பரங்கிக்காய், அவரை கூட்டு சாதம் வைத்து, வழிபாடு செய்வது வழக்கம். இதனால், மாவட்டத்தில் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு, தர்மபுரி, பென்னாகரம், பாலக்கோடு உள்ளிட்ட பகுதிகளில் குறிப்பிடத்தக்க வகையில், பரங்கிக்காய் சாகுபடி செய்யப்படுவது வழக்கம். இந்தாண்டு, தர்மபுரி மாவட்டத்தில் பருவமழை பொய்த்ததால், பரங்கிக்காய் விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், பொதுமக்களின் தேவையை பூர்த்தி

செய்ய, திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து பரங்கிக்காய்களை வாங்கி வந்து, தர்மபுரி வியாபாரிகள் விற்பனை செய்து வருகின்றனர்.

இதுகுறித்து, தர்மபுரியை சேர்ந்த வியாபாரி பழனியப்பன் கூறியதாவது: இந்தாண்டு, தர்மபுரி மாவட்டத்தில் பரங்கிக்காய் போதிய அளவில் விளைச்சல் இல்லாததால், திருவண்ணாமலை மாவட்டத்தில் இருந்து பரங்கிக்காய்களை வாங்கி வந்து விற்பனை செய்கிறோம். ஒரு கிலோ அதிகபட்சமாக, 20 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதை பொதுமக்கள் ஆர்வத்துடன் வாங்கி செல்கின்றனர். இவ்வாறு அவர் கூறினார்.

**யானைகளிடம் இருந்து விவசாய பயிர்களை காக்க மரத்தில் பரண் அமைத்து விவசாயிகள் கண்காணிப்பு**

ஓசூர்: ஓசூர் பகுதியில், காட்டு யானைகளிடம் இருந்து பயிர்களை பாதுகாக்க, மரங்களில் பரண் அமைத்து கண்காணிக்கும் பணியில் விவசாயிகள் ஈடுபட்டுள்ளனர்.

ஓசூர், தேன்கனிக்கோட்டை தாலுகாவில், வனப்பகுதியை ஓட்டியுள்ள, எட்டு வருவாய் கிராமங்களில், 400 ஹெக்டேரில், தக்காளி, கோஸ், பீட்ருட், காலி பிளவர், ராகி உட்பட பல்வேறு பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டுள்ளன. வனப்பகுதியில் நிலவும் வறட்சி காரணமாக வெளியேறும் காட்டு யானைகள், வனத்தை ஒட்டியுள்ள கிராம பகுதிகளுக்குள் புகுந்து, அங்கு சாகுபடி செய்யப்பட்ட விவசாய பயிர்களை நாசம் செய்து வருகின்றன. இதனால், பல விவசாயிகள் நஷ்டமடைந்து, விவசாயம் செய்ய வழியின்றி தவித்து வருகின்றனர். பயிர்களை காப்பாற்ற, நிலங்களில் காவல் இருக்கும் விவசாயிகள், யானைகளால் தாக்கப்படுகின்றனர். சில நேரங்களில் உயிரிழப்பும் ஏற்படுகிறது. இதை தடுக்கும் வகையில், வனப்பகுதியை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில், மரங்களில் பரண் அமைத்து, யானைகளின் நடமாட்டத்தை விவசாயிகள் கண்காணித்து வருகின்றனர். யானைகள் நடமாட்டம் இருப்பது தெரிந்தால், பரணில் இருந்தவாறு, தாரை, தப்பட்டை மற்றும் சத்தம் போட்டு, யானைகளை விரட்ட முயற்சி செய்து வருகின்றனர். ஆனால், ஒற்றை யானை வந்தால், அதை விரட்ட முடிவதில்லை என்று கூறுகின்றனர். வனத்துறை வருவதற்குள், ஒற்றை யானை பயிர்களை நாசம் செய்து விட்டு சென்று விடுகிறது. இருந்தாலும், ஓசூர் வனக்கோட்டத்திற்கு உட்பட்ட ஜவளகிரி, உரிகம், அஞ்செட்டி, தேன்கனிக்கோட்டை வனச்சரக பகுதி விவசாயிகள்,

மரத்தில் பரண் அமைத்து கண்காணித்து, யானைகள் வரும்போது அவற்றை வெற்றிகரமாக விரட்டி வருகின்றனர்.

**ஆடு வழங்கும் முகாம் பங்கேற்க அழைப்பு**

பந்தலுார் : பந்தலுார் அருகே,சேரங்கோடு பகுதியில் இன்று (12ம்தேதி) விலையில்லா ஆடு வழங்குவதற்கான, பயனாளிகள் தேர்வு முகாம் நடக்கிறது.

சேரங்கோடு சமுதாய கூடத்தில், இன்று காலை,11:00 மணி முதல், கூடலுார் ஊராட்சி ஒன்றியம், கால்நடை பராமரிப்புத்துறை சார்பில், விலையில்லா ஆடு வழங்குவதற்கான, பயனாளிகள் தேர்வு செய்யும் சிறப்பு கிராம சபை கூட்டம் நடக்கிறது.

இந்த முகாமில்,பங்கேற்கும் பயனாளிகள், பாஸ்போர்ட் சைஸ் புகைப்படம், ஆதார் அட்டை மற்றும் ரேசன் கார்டு நகல்களை கொண்டுவர வேண்டும்; தேர்வு செய்யப்படும் பயனாளிகளுக்கு, வேறோரு நாளில் ஆடுகள் வழங்கப்படும்.

இதற்கான ஏற்பாடுகளை, கால்நடை டாக்டர் பிரபு தெரிவித்துள்ளார்.

**கிணற்றில் தண்ணீரை ஊற்றி பயிர்களை காப்பாற்றும் விவசாயிகள்**

பழநி திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் அருகே கப்பலப்பட்டியில் டிராக்டர், லாரிகளில் தண்ணீர் கொண்டுவந்து கிணற்றில் ஊற்றி, பின்னர் பம்ப் செய்யும் விவசாயிகள், பயிர்களை காப்பாற்ற கடும் போராட்டம் நடத்தி வருகின்றனர். திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம், பழநி சுற்றுப் பகுதிகளான சத்திரப்பட்டி, மஞ்சநாயக்கன்பட்டி, காளிப்பட்டி, கப்பலப்பட்டி, பொருளூர், தேவத்துார், பூலாம்பட்டி உள்ளிட்ட பகுதிகளில் கிணற்றுப் பாசனம் உள்ளது.

இப்பகுதியில் மழையை நம்பி ஆண்டு முழுவதும் மக்காச்சோளம், பருத்தி, முருங்கை மற்றும் காய்கறிகள் சாகுபடியும், சீசன் நேரத்தில் கண்வலி கிழங்கு சாகுபடியும் நடக்கிறது. இந்தாண்டு பருவமழை பொய்த்ததால், ஆயிரத்திற்கும் மேற்பட்ட கிணறுகள் வறண்டு போயின. இதனால் பல ஏக்கர் பரப்பளவில் பயிர்கள் காய்ந்து கருகின. விவசாயிகளுக்கு ரூ.பல லட்சம் இழப்பு ஏற்பட்டுள்ளது. கால் நடைகளுக்கு தீவன பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. சிலபகுதிகளில் தீவனம் இல்லாததால், ஆடு, மாடுகளை குறைந்த விலைக்கு விற்கவேண்டிய நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டுள்ளனர்.

பரிதாபத்தில் விவசாயிகள்: இப்பகுதியில் மழையை நம்பி ஏக்கருக்கு ரூ. பல ஆயிரம் செலவழித்து பருத்தி, முருங்கை, கண்வலி கிழங்கு சாகுபடி செய்த விவசாயிகள், ஓரளவுக்கு வளர்ந்து தண்ணீருக்கு ஏங்கும் பயிர்களை காப்பாற்ற போராடி வருகின்றனர்.

இதற்காக அருகில் உள்ள தாராபுரம், விருப்பாட்சி போன்ற பகுதிகளில் இருந்து தண்ணீரை விலைக்கு வாங்கி டிராக்டர், லாரிகளில் கொண்டுவருகின்றனர். அதனை தங்கள் நிலத்தில் உள்ள கிணற்றில் ஊற்றுகின்றனர். பின், சொட்டுநீர் பாசனம் மூலம் பயிர்களை பாதுகாக்க நீர்பாய்ச்சுகின்றனர்.

விவசாயி செல்லப்பன் கூறியதாவது: மழையில்லாததால் கிணறு வறண்டுவிட்டது. தண்ணீரின்றி கத்தரி செடிகள் முழுமையாக காய்ந்துவிட்டது. தற்போது கண்வலிகிழங்கு, முருங்கை செடிகளையாவது காப்பாற்ற வேண்டும் என கருதுகிறேன்.

ஒருலாரி தண்ணீர் வாடகை ரூ.3,200, டிராக்டர் எனில் ரூ.1000 ஆகிறது. கண்வலி கிழங்கு சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு ரூ.2 லட்சம் செலவாகிறது. ஏக்கருக்கு ரூ.50 ஆயிரம் வரை தண்ணீர் செலவு கூடுதல் ஆகியுள்ளது. என்னைப்போல பலர் தண்ணீரை விலைக்கு வாங்கி பயிர்களை காப்பாற்றுகின்றனர், என்றார்.

தினகரன்

## வீட்டு காய்கறி தோட்டம் அமைக்க பயிற்சி

சின்னசேலம்: சின்னசேலம் அருகே தோட்டப்பாடி கிராமத்தில் வேளாண்மை துறையின் கீழ் உள்ள அட்மா திட்டத்தின் சார்பில் வறட்சியை சமாளிக்கும் வகையில் வீட்டு காய்கறி தோட்டம் , மாடித்தோட்டம் அமைத்தல் குறித்த பயிற்சி முகாம் நடந்தது.

தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர்(பொறுப்பு) முருகன் தலைமை தாங்கினார். வட்டார தொழில் நுட்ப மேலாளர் மவிசுதா வரவேற்று , காய்கறி தோட்டம் அமைத்தலின் பயன்கள் குறித்து விளக்க உரையாற்றினார். தோட்டக்கலைத்துறை

உதவி இயக்குநர்(பொறுப்பு) முருகன் வீட்டு காய்கறி தோட்டம் அமைத்தல் பற்றியும் , மடிக்கணினி மூலம் செயல் விளக்கங்கள் , செய்முறையுடன் காட்டி சிறப்புரையாற்றினார். வீட்டு காய்கறி தோட்டம் , மாடித்தோட்டம் அமைப்பதற்கான விதைகள் அனைத்தும் விவசாயிகள் பார்வையிட்டு பயன்பெறும் வகையில் கண்காட்சி அமைக்கப்பட்டிருந்தது. இந்த முகாமில் ஏராளமான விவசாயிகள் , மகளிர் சுய உதவி குழுவினர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். உதவி தொழில் நுட்ப மேலாளர்கள் அன்பு, ஜெயபாலன் ஆகியோர் ஏற்பாடு செய்திருந்தனர்.

## பொங்கலுக்கு 2 நாட்களே உள்ளது கடந்த ஆண்டை விட கரும்பு விலை உயர்வு

கோவை: தமிழகத்தில் தேனி மாவட்டம் சின்னமனூர் , கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம், புவனகிரி, காட்டுமன்னார்கோயில் மற்றும் சேலம் , மதுரை, தேனி ஆகிய மாவட்டங்களில் இருந்து பொங்கல் பண்டிகைக்கான செங்கரும்பு சாகுபடி அதிகளவில் நடக்கிறது. கோவைக்கு பொங்கலை முன்னிட்டு ஒரு வாரத்திற்கு முன்பே கரும்புகள் வரத்துவங்கிவிடும். உக்கடம், தியாகி குமரன் மார்க்கெட் , பூ மார்க்கெட் மற்றும் எம்ஜிஆர் காய்கறி மார்க்கெட் ஆகிய 4 இடங்களில் மொத்தமாகவும், சில்லரையாகவும் விற்கப்படுகிறது. இங்கிருந்து மாநகரில் 200க்கு மேற்பட்ட இடங்களில் கரும்பு விற்பனை துவங்கிவிடும்.

கோவை உக்கடம் மற்றும் பூ மார்க்கெட்டிலுள்ள கரும்பு வியாபாரிகள் கூறுகையில் , ‘கடந்த ஆண்டு ஒரு ஜோடி கரும்பு ரூ. 70 முதல் ரூ. 100 வரை விற்கப்பட்டது. இந்த ஆண்டு ஒரு ஜோடி கரும்பு ரூ. 100 முதல் ரூ. 140 வரை விற்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. விலை உயர்வாலும் , தற்போதைய பணத்தட்டுபாடு காரணமாக , கரும்பு விற்பனை குறையும். இதனால் கடந்த ஆண்டை காட்டிலும் விலை

உயர்ந்தாலும், விற்பனை குறைவதால் , வியாபாரிகளுக்கு குறைந்தபட்ச லாபமே கிடைக்கும்.' என்கின்றனர் வியாபாரிகள்.

## உளுந்தூர்பேட்டை அருகே வன விலங்குகளால் பயிர்கள் சேதம்

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை மற்றும் சுற்றியுள்ள கிராமங்களில் அதிக அளவு விவசாயம் செய்யும் பணிகள் நடைபெற்று வருகிறது. இதில் எ.சாத்தனூர் , எடைக்கல், மலையனூர், வெள்ளையூர், குமாரமங்கலம், கணையார், பாண்டூர், சிறுபாக்கம், அரளி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களின் விவசாய நிலங்களுக்கு அருகில் வனத்துறைக்கு சொந்தமான காப்பு காடுகள் உள்ளது. இந்த காடுகளில் அதிக அளவு மான், மயில், காட்டுப்பன்றிகள் உள்ளது.

இந்த மான் உள்ளிட்ட வன விலங்குகள் பகல் மற்றும் இரவு நேரங்களில் இரை தேடியும், தண்ணீருக்காகவும் காப்பு காடுகளில் இருந்து அருகில் உள்ள வயல்வெளிப்பகுதிக்கு வருகிறது. அவ்வாறு வரும் மான் மற்றும் காட்டுப்பன்றி உள்ளிட்ட வன விலங்குகளால் விவசாய பயிர்கள் அதிக அளவு சேதம் அடைந்து வருவதாக விவசாயிகள் கூறுகின்றனர். இது குறித்து காப்புகாடுகளை ஒட்டியுள்ள கிராமங்களை சேர்ந்த விவசாயிகள் கூறுகையில் , பகல் மற்றும் இரவு நேரத்தில் அதிக அளவு மான் , காட்டுப்பன்றிகள் வருவதால் தற்போது மானாவாரியாக பயிரிடப்பட்டுள்ள உளுந்து செடிகள் முற்றிலும் சேதம் அடைந்துள்ளது.

இதற்காக இரவு நேரத்தில் கடும் பனிப்பொழிவினை கூட பொருட்படுத்தாமல் வயல்வெளிப்பகுதியிலேயே கொட்டகை அமைத்து தங்கி காவல் காத்து வருகிறோம். ஏற்கனவே மழை இல்லாமல் கடும் வறட்சியால் பாதிக்கப்பட்டுள்ள விவசாயிகளுக்கு

மேலும் மனஉளைச்சல் தரும் வகையில் இந்த காட்டு விலங்குகள் பயிர்களை மேய்ந்து சேதம் செய்து வருகிறது.

இது குறித்து வனத்துறை அதிகாரிகளிடம் பல முறை கூறியும் எந்தவித நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதனால் விவசாய நிலங்களை சுற்றி கயிற்றில் துணி கட்டி வந்தாலும் உளுந்து, நெல் உள்ளிட்ட விவசாய பயிர்களை தின்று சேதம் செய்து வருகிறது. எனவே வனத்துறைக்கு சொந்தமான காப்பு காடுகளை ஒட்டியுள்ள விவசாய நிலங்களில் பயிர் செய்துள்ள விவசாயிகளுக்கு வனத்துறையினர் உரிய நிவாரண உதவிகள் வழங்க வேண்டும் என கோரிக்கை வைத்துள்ளனர்.

## வாழை வணிக வளாகத்தில் பூவன்தார் ரூ.220க்கு ஏலம்

திருச்சி: திருச்செந்துறை வாழை வணிக வளாகத்தில் வாழைத்தார் பொது ஏலம் நடந்தது. 694 வாழைத்தார்கள் ஏலத்திற்கு வந்தன. அம்மன்குடி , கிளிய நல்லூர் , செங்கரை, மஞ்சக்கோரை உள்ளிட்ட கிராமங்களிலிருந்து வாழைத்தார்களை ஏலத்திற்கு கொண்டு வந்தனர். மொத்தம் ரூ. 62,495க்கு தார்கள் ஏலம் போனது. கற்பூரவள்ளி ரூ. 170க்கும், பூவன் 220, ரஸ்தாளி 160, மொந்தன் 135க்கும் ஏலம் போனது. அடுத்த ஏலம் வரும் 17ம் தேதி நடக்கிறது.

## தண்டலையில் விவசாயிகளுக்கு பயிற்சி

ஜெயங்கொண்டம்: ஜெயங்கொண்டம் வட்டார வேளாண் துறையின்மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் மாநில விரிவாக்க திட்டங்களுக்கான உறுதுணை சீரமைப்புத் திட்டத்தின்கீழ்(அட்மா) வீட்டுதோட்டம் மற்றும் மாடிதோட்டம் அமைப்பது குறித்த மாவட்டஅளவிலான விவசாயிகள் பயிற்சி தண்டலை மற்றும் கல்லேரி ஆகியகிராமங்களில் நடைபெற்றது. வேளாண்மை உதவி இயக்குநர்(பொ) காசிநாதன் தலைமை வகித்தார். கிரீடு வேளாண் அறிவியல்நிலைய திட்ட

ஒருங்கிணைப்பாளர் அழகுக்கண்ணன் பயிற்சி அளித்தார். காய்கறிகள் மற்றும் கீரைகளை வீட்டு தோட்டத்திலும் , மாடியிலும் வளர்க்கும்போது கடைபிடிக்கவேண்டிய தொழில்நுட்பங்கள் குறித்து விளக்கினார்.முன்னதாக வட்டார தொழில்நுட்ப மேலாளர் மீனாட்சி திட்ட செயல்பாடுகள் குறித்து விளக்கினார். உதவி தொழில்நுட்ப மேலாளர்கள் முருகன் , சங்கீதபிரியா, உதவி தோட்டக்கலை அலுவலர்கள் செல்வகுமார், சிலம்பரசன் ஆகியோர் கலந்து கொண்டனர். பயிற்சியில் விவசாயிகள் மற்றும் பண்ணை மகளிர் கலந்து கொண்டனர்.

## வறட்சி பாதிப்பு நிலங்கள் ஆய்வு

குளித்தலை பகுதியில் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் நிலங்களை அந்தந்த பகுதி விஏஓவினர் நேரில் சென்று பார்வையிட்டு கணக்கெடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இதில் விவசாயி ஒருவரின் நிலத்தின் சர்வே எண் , அவர் பயிரிட்டுள்ள நிலத்தின் பரப்பளவு , நிலத்தில் பயிரிட்டுள்ள பயிர்களின் வகை , சேத மதிப்பு உள்ளிட்டவைகளை இதற்கென உள்ள படிவத்தில் பூர்த்தி செய்து வருகின்றனர்.

இந்த நிலையில் மருதூர் வடக்கு 1 பகுதியை குளித்தலை ஆர்டிஓ சக்திவேல் நேற்று நேரடி களஆய்வு பணியை மேற்கொண்டார். அப்போது விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும், இவற்றை விஏஓவினர் முறையாக கணக்கெடுத்து படிவங்களில் பூர்த்தி செய்கின்றனரா என்று ஆய்வு செய்தார். அப்போது குளித்தலை தாசில்தார் சக்திவேல், மற்றும் வருவாய்த்துறை அதிகாரிகள் உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

## மழையில்லாததால் கண்முன்னே கருகுகின்றன மனஉளைச்சலில் மக்காச்சோள விவசாயிகள் கலெக்டரிடம் கிராம மக்கள் மனு

சிவகாசி: சிவகாசி பகுதியில் மழையில்லாததால் மக்காச்சோளப் பயிர்கள் கருகி வருகின்றன. இதனால் , விவசாயிகள் மனஉளைச்சலில் உள்ளனர். கடன் வாங்கி பயிரிட்டோம் நிவாரணத்துக்காக காத்திருக்கிறோம் என்கின்றனர்.தமிழகத்தில் நவம்பர் மாதம் தொடங்கி டிசம்பர் கடைசி வரை வடகிழக்கு பருவமழை பெய்யும். இதனால், மானாவாரி விவசாயிகள் பயனடைவர். இந்தாண்டு எதிர்பார்த்த அளவிற்கு வடகிழக்கு பருவமழை பெய்யவில்லை. சிவகாசி ஒன்றியத்தில் வடகிழக்கு பருவமழை முற்றிலும் பொய்த்து போனது. இதனால் இப்பகுதியில் உள்ள குளங்கள் , விவசாயக் கிணறுகள், ஓடைகள் என அனைத்து நீர்நிலைகளும் வறண்டு காணப்படுகின்றன இதனால், விவசாயிகள் கவலையில் உள்ளனர். சிவகாசி சுற்றுப்புற கிராம பகுதிகளில் குறிப்பாக மாரனேரி , காக்கிவாடன்பட்டி, புதுக்கோட்டை, செவலூர், காளையார்குறிச்சி பகுதிகளில் மானாவாரி காடுகள் அதிகமாக உள்ளன. ஆண்டுதோறும் மாக்காச்சோளம் , சூரியகாந்தி பூ பயிரிடுவர். இந்தாண்டு வடகிழக்கு பருவமழை பொய்த்து போனதால் மாக்காச்சோள பயிர்கள் கருகி வருகின்றன. வேதனையடைந்த விவசாயிகள் அரசின் நிவாரணத் தொகையை எதிர்பார்த்து காத்திருக்கின்றனர். இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:

சௌந்திரராஜன்: மூன்று தலைமுறையாக விவசாயம் செய்கிறோம். இந்த ஆண்டு 22 ஏக்கரில் மக்காச்சோளம் பயிரிட்டோம். மழையில்லாததால் கருகி விட்டன. ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் செலவு செய்தேன். தற்போது காய்ந்து வரும் பயிரை கால்நடைகள் மேய்ச்சலுக்கு மட்டுமே பயன்படுத்த முடியும். தமிழக அரசு ஏக்கருக்கு 25 ஆயிரம் ரூபாய் நிவாரணம் வழங்க வேண்டும். வெங்கட்ராமானுஜம்: சிவகாசி ஒன்றியத்தில் வடகிழக்கு பருவமழை பெய்யவில்லை. இதன் காரணமாக விளைநிலங்களில் உள்ள கிணறுகளில் தண்ணீர் இல்லை. இப்பகுதியில் உள்ள குளங்கள், ஓடைகள் வறண்டு கிடக்கின்றன. பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உரிய

நிவாரணம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மணிகண்டபிரபு: ஒரு லட்சம் ரூபாய் வரை கடன் வாங்கி ஐந்தரை ஏக்கரில் மக்காச்சோளம் சாகுபடி செய்தேன். போதிய மழை இல்லாததாலும், வாய்க்காலில் தண்ணீர் இல்லாததாலும் பயிர் முழுவதும் கருகியதால் மனஉளைச்சலுக்கு ஆளாகியுள்ளோம். குடும்பமும் வறுமையில் உள்ளது.கடன் வாங்கி சாகுபடி செய்திருப்பதால் உரிய நிவாரணம் வழங்க வேண்டும்.

ராமச்சந்திரன்: நகைகளை அடமானம் வைத்து, ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் செலவு செய்து மக்காச்சோளம் பயிரிட்டேன். 100 நாள் வேலையும் இல்லாததால் வீட்டில் முடங்கி கிடக்கிறோம். கருகிய பயிர்களை பார்த்து தினமும் செத்து கொண்டிருக்கிறோம். ரேஷன் அரிசியை சமைத்து சாப்பிடுகிறோம். குழந்தைகளுக்காக உயிர்வாழ்கிறோம். கடன் வாங்கி பயிரிட்டோம்; நிவாரணத்துக்காக காத்திருக்கிறோம்.

## நாளை போகி பண்டிகை குமரியில் பொங்கல் வியாபாரம் களை கட்டியது கரும்பு, காய்கறிகள் குவிந்தன

நாகர்கோவில்: குமரியில் பொங்கல் பண்டிகைக்கான பொருட்கள் விற்பனை களை கட்டி உள்ளது. பல்வேறு இடங்களில் இருந்து கரும்புகள், காய்கறிகள் விற்பனைக்காக குவிந்துள்ளன.தமிழர் திருநாளான பொங்கல் பண்டிகை நாளை மறுதினம் ( 14ம் தேதி) கொண்டாடப்படுகிறது. நாளை ( 13ம்தேதி) போகி பண்டிகை ஆகும். குமரி மாவட்டத்திலும் பொங்கல் பண்டிகை வெகு விமரிசையாக கொண்டாடப்படும். விளையாட்டு போட்டிகள், கலை நிகழ்ச்சிகள் ஆங்காங்கே நடைபெறும். இதற்கான ஏற்பாடுகள் அனைத்தும் தீவிரமாக தொடங்கி நடந்து வருகின்றன. வீடுகளில் வர்ணம் பூசுதல் உள்ளிட்ட பணிகள் நடந்து முடிந்துள்ளன. பொங்கலுக்கு முந்தைய நாள், போகி பண்டிகை ஆகும். பழையன கழிதலும், புதியன புகுதலும் தான் போகி ஆகும். எனவே வீடுகளில் தேவையில்லாத பொருட்களை தீ வைத்து கொளுத்துவார்கள்.

சுற்றுச்சூழலுக்கு மாசு ஏற்படாத வகையில் போகி கொண்டாட்டங்கள் அமைய வேண்டும் என்று சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இடையில் ஒரு நாள் மட்டுமே இருப்பதால், பொங்கலுக்கு தேவையான பொருட்களை வாங்குவதிலும் மக்கள் அதிக ஆர்வம் காட்டி வருகிறார்கள். கரும்பு , மஞ்சள் கிழங்கு, பனங்கிழங்கு, பனை ஓலை உள்ளிட்டவற்றின் விற்பனை சூடுபிடித்துள்ளது. மேலும் பொங்கல் சீர்வரிசை பொருட்கள் அளிப்பதற்காக பித்தளை மற்றும் வெண்கல பானைகள் வாங்குவதிலும் மக்கள் ஆர்வமாக உள்ளனர். மண் பானைகளும் பல்வேறு விதமான வகைகளில் விற்பனைக்காக வந்து குவிந்துள்ளன.

குமரி மாவட்டத்தில் வடசேரி , ஒழுகினசேரி அப்டா மார்க்கெட் , மார்த்தாண்டம், திங்கள்சந்தை மார்க்கெட் உள்ளிட்ட மார்க்கெட் பகுதிகளில் விற்பனைக்காக கரும்புகள் வந்து குவிந்துள்ளன. திண்டுக்கல் , மதுரை, தேனி உள்ளிட்ட பகுதிகளில் இருந்து கரும்பு வகைகள் வந்துள்ளன. ராஜபாளையம் , நிலக்கோட்டை பகுதிகளில் இருந்து மஞ்சள் கிழங்கு மற்றும் பனங்கிழங்கு வியாபாரிகள் வந்துள்ளனர். இந்நிலையில் கரும்பு, பனங்கிழங்கு, காய்கறிகளின் விலைகள் கடுமையாக உயர்ந்து உள்ளன. ஒரு கரும்பின் விலை ரூ. 40, 45 என தரத்துக்கேற்ப விற்பனை செய்யப்படுகிறது. ஒரு கட்டு கரும்பின் விலை ரூ. 600 க்கு மேல் ( 15 எண்ணம்) விற்பனையாகிறது. பொங்கல் பண்டிகைக்கு மறுநாள் மாட்டு பொங்கல் ஆகும். அதற்கு மறுநாள் காணும் பொங்கல் ஆகும். தொடர்ந்து விடுமுறை வருவதால் சுற்றுலா தலங்களிலும் ஏராளமானவர்கள் வருவார்கள். எனவே இதற்கு தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல் துறையினர் மேற்கொள்ள எஸ்.பி. தர்மராஜன் உத்தரவிட்டுள்ளார். கன்னியாகுமரி , திற்பரப்பு, சுசீந்திரம் கோயில் , பத்மநாபபுரம் அரண்மனை, மாத்தூர் தொட்டிப்பாலம் , சங்குதுறை, சொத்தவிளை பீச் உள்ளிட்ட மாவட்டத்தின் மிக முக்கிய சுற்றுலா தலங்களில் பாதுகாப்பை அதிகரிக்க போலீசார் முடிவு செய்துள்ளனர்.

## மணிலா பயிரில் சுருள் பூச்சிகளை கட்டுப்படுத்த ஆலோசனை

குறிஞ்சிப்பாடி: மணிலா பயிரில் ஏற்படும் சுருள் பூச்சிகளை கட்டுப்படுத்த குறிஞ்சிப்பாடி வேளாண்மை துறை சார்பில் விவசாயிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.இது குறித்து குறிஞ்சிப்பாடி வேளாண்மை உதவி இயக்குனர் ஏழுமலை விடுத்துள்ள அறிக்கையில், குறிஞ்சிப்பாடி வட்டாரத்தில் தற்போது பல்வேறு கிராமங்களில் சாகுபடி செய்யப்பட்டுள்ள மணிலா பயிர் வளர்ச்சி பெற்று பூக்கும் தருவாயில் உள்ளது. இந்த பருவத்தில் மணிலாவில் ஆங்காங்கே சுருள் பூச்சி மற்றும் புடீஜினா தாக்குதல் காணப்படுகிறது. இவற்றை கட்டுப்படுத்துவதன் மூலம் மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. சுருள் புழுக்கள் இரண்டு , மூன்று இலைகளை பிணைத்திருக்கும். இலைகளின் திசுக்களுக்கிடையே இந்த புழுக்கள் ஊடுருவி சென்று பச்சையத்தை சுரண்டி உண்ணும். தாக்கப்பட்ட இலைகள் காய்ந்து கீழே விழுந்துவிடும். இவையெல்லாம் சுருள் பூச்சிகளுக்கான அறிகுறிகளாகும்.

இந்த பூச்சிகள் வெள்ளை நிறமுடைய பெண் அந்துப்பூச்சி இலையின் அடிப்புறத்தில் கூடுகட்டி முட்டைகளை இட்டுவைக்கும். புழுக்கள் பச்சை மற்றும் கருமை நிறத்தில் இருக்கும். விளக்கு கவர்ச்சி பொறியை ஏக்கருக்கு 12 வீதம் அமைப்பதன் மூலம் அந்துப்பூச்சியை கவர்ந்து அழிக்கிறது. பெண் அந்துப் பூச்சி மஞ்சள் நிற முட்டைகளை தனித்தனியாக இலைகளின் மேல்பக்கத்தில் இடும். முட்டையிலிருந்து வெளிவரும் புழு பழுப்பு அல்லது மஞ்சள் நிறத்தில் இருக்கும்.இவைகளை கோடை காலத்தில் நிலத்தை ஆழமாக உழுது , புழு மற்றும் முட்டைகளை அழிக்க முடியும். மேலும் இனகவர்ச்சி பொறியை ஏக்கருக்கு 5 வீதம் அமைத்து ஆண் அந்துப் பூச்சியை கவர்ந்து அழிக்கலாம். பயிர் பாதுகாப்பு மருந்தாக குளோரோபைரியன் , 2 கிலோ ஏக்கருக்கு தண்ணீரில் கலந்து மாலை வேளையில் செடி நனையுமாறு தெளிக்க வேண்டும்.

## 10 ஆண்டுகளுக்கு பிறகு கடும் வறட்சி நெற்பயிரை காப்பாற்ற கிணற்று நீரை விலைக்கு வாங்கி பாய்ச்சும் விவசாயி

பெரம்பலூர்: 10ஆண்டுகளுக்கு பிறகு ஏற்பட்டுள்ள கடும் வறட்சியால் பெரம்பலூர் அருகே நெற்பயிரைக் காப்பாற்ற ரூ. 10ஆயிரத்திற்கு மேல் செலவு செய்து 400 மீட்டருக்கு அப்பாலுள்ள கிணற்றுநீரை விலைக்கு வாங்கி விவசாயி பாய்ச்சினார். பெரம்பலூர் மாவட்டம் மானாவாரி சாகுபடிப் பயிர்களை நம்பியுள்ள பகுதியாகும். இங்கு இயற்கையான சாகுபடிப்பரப்பு 1,10,500 எக்டெர் ஆகும். 2015ம் ஆண்டில் சற்றுகூடுதலாக 1,19,962 எக்டேரில் சாகுபடி நடந்துள்ளது. ஆனால் நடப்பாண்டு 93,162எக்டேரில் மட்டுமே சாகுபடி நடந்துள்ளது. இதில் 70, 649எக்டேர் சாகுபடிப்பரப்பு தற்போது வறட்சியால் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

மாவட்டத்தின் சராசரி மழையளவு 908மிமீ கணக்கிடப்பட்டும் , 2016ல் 512.84 மிமீ மழை மட்டுமே பெய்துள்ளது. பெரம்பலூர் மாவட்டம் முற்றிலும் கிணற்றுப்பாசனத்தை நம்பியுள்ள விவசாயிகளைக் கொண்ட மாவட்டமாகும். . தற்போது மழையின்றி , நிலத்தடி நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துபோனதால் கிணறுகளும் வற்றி வருகிறது. இருக்கும் மூன்றடி தண்ணீரைப் பாய்ச்சி விவசாயிகள் பயிர்களைக் காப்பாற்றப் போராடி வருகின்றனர்.

பெரம்பலூர் அருகேயுள்ள பாளையம் வடக்குத்தெருவைச் சேர்ந்த பிச்சைப் பிள்ளை என்பவருக்குச் சொந்தமான வயலும் கிணறும் பாளையம் , செஞ்சேரி கிராமங்களுக்கு இடையே உள்ளது. இவரது வயலில் பயிரிடப்பட்டுள்ள நெற்பயிருக்கு தண்ணீர்பாய்ச்ச ஏதுவாக இவரது கிணற்றில் போதுமான தண்ணீர்வசதி இல்லை. இருக்கும் 3அடி தண்ணீரை பாய்ச்சினால் , மீண்டும் தண்ணீர் சுரக்காத பட்சத்தில் மேலும் ஒரு மாதத்திற்கு சமாளிக்கமுடியாது. இதனால் பெரம்பலூர் துறையூர் சாலையில் தென்புறம் உள்ள இவரது வயலுக்கு 400மீட்டர் தொலைவுக்கு அப்பால் நெடுஞ்சாலையைக் கடந்து வடபுறமுள்ள மருதாம்மாள் என்பவரது வயல்

கிணற்றிலிருந்து பிளாஸ்டிக் குழாய் மூலமாக தண்ணீர் விலைக்கு வாங்கிப் பாய்ச்சப்படுகிறது.இதற்காக ரூ 10ஆயிரத்திற்கு மேல் பிளாஸ்டிக் குழாய்வாங்கி , தண்ணீருக்கும் விலைகொடுத்து ஒரு மாதத்திற்கு பாய்ச்சுவதற்கு ஏற்பாடு செய்துள்ளார். உயிரைக் காப்பதுபோது , பயிரைக் காப்பாற்ற விவசாயி போராடி வருகிறார்.

## மதுரை மாவட்டத்தில் 618 கிராமங்களில் கடும் வறட்சி

மதுரை: மதுரை மாவட்டத்தில் 618 கிராமங்களில் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளதாக அரசுக்கு அறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. மதுரை மாவட்டத்தில் தென்கிழக்கு , வடகிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவு பெய்யவில்லை. இதனால் இருபோக பாசனம் முற்றிலும் தடைபட்டது. மாவட்டத்தில் மொத்தமுள்ள 53 ஆயிரம் ஹெக்டேரில் 6 ஆயிரம் ஹெக்டேரில் மட்டுமே நெல் பயிரிடப்பட்டுள்ளது. மாவட்டத்தில் ஏற்பட்டுள்ள வறட்சி குறித்து வருவாய்த்துறை , வேளாண்மைத்துறை, புள்ளியல் துை◌றயை சேர்ந்த குழுவினர் 10 சதவீத மாதிரி ஆய்வு நடத்தினர். உள்ளூர் அமைச்சர்கள் குழுவும் வறட்சி குறித்து ஆய்வு நடத்தினர். இந்த ஆய்வு 2 நாளில் முடிந்து நேற்று முன்தினம் இரவு மாவட்ட நிர்வாகம் சார்பில் அறிக்கை தமிழக அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.இது குறித்து கலெக்டர் வீரராகவராவ் நிருபர்களிடம் கூறும்போது , “வறட்சி காரணமாக இந்த ஆண்டு சம்பா சாகுபடி மாவட்டத்தில் 6 ஆயிரத்து 82 ஹெக்டேரில் மட்டுமே நடக்கிறது. இது 15 சதவீதம் ஆகும்.

85 சதவீதம் நிலம் தரிசாக உள்ளது. வறட்சியால் நெல் நடவு பணி முற்றிலும் நடைபெறவில்லை. தானியங்கள் 23,732 ஆயிரம் ஹெக்டேரிலும் , எண்ணெய் வித்து பயிர்கள் 1,652 ஹெக்டேரிலும் பயிரிடப்பட்டது. பருத்தி 8,416 ஹெக்டேரிலும், கரும்பு

2,786 ஹெக்டேரிலும் பயிரிடப்பட்டுள்ளது. இதில் பருவமழை இல்லாத காரணத்தால் , எதிர்பார்த்த அளவு விளைச்சல் இல்லை.வறட்சி குறித்து கிராமங்களிலும் மாதிரி ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. கடுமையாக பதிக்கப்பட்ட கிராமங்களை தேர்வு செய்து மாதிரி சர்வே செய்தனர். மாவட்டத்தில் மொத்தம் உள்ள 645 கிராமத்தில் 618 கிராமம் வறட்சியால் கடுமையாக பாதிப்பு அடைந்துள்ளது. பயிரிடப்பட்ட விவசாயமும் 50 சதவீதத்திற்கு மேல் பாதிப்பு ஏற்பட்டு , எதிர்பார்த்த விளைச்சல் இல்லை. மாவட்டத்தில் 90 சதவீதம் வறட்சி உள்ளது. இதனை இறுதி அறிக்கையாக தயாரித்து அரசிடம் வழங்கப்பட்டது,"என்றார்.

## வறட்சியால் வறண்டது கண்மாய் , குளங்கள் தூர்வார வேண்டும் பொது மக்கள் கோரிக்கை

தொண்டி: தொண்டி பகுதியில் அனைத்து கண்மாய் மற்றும் குளங்களும் தறபோது வறண்டு போய் உள்ளது. இந்த நேரத்தில் கண்மாய் , குளங்களை தூர்வார நடவடிக்கை எடுக்க பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.திருவாடானை பகுதியில் இந்த வருடம் பருமழை பொய்த்து விட்டதால் 200க்கும் அதிமான பாசன கண்மாய்களும், 400க்கும் மேற்பட்ட சிறு கண்மாய் மற்றும் குளங்கள் முற்றிலும் வறண்டு போய் உள்ளது. இந்த நேரத்தில் தூர்வார தகுந்த நேரம் என்பதால் , அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுத்தால் முழுமையான பலன் கிடைக்கும்.

மழை காலங்களில் தண்ணீர் இருப்பதால், தூர்வார முடியாத நிலை ஏற்படும். இதனால் அதிக அக்கறை கொண்டு அதிகாரிகள் உடன் நடவடிக்கையில் இறங்கினால் வரும் காலங்களில் தண்ணீரை அதிகம் சேமிக்க முடியும். தொண்டி பேராட்சியில் சில குளங்கள் தூர்வாரப்பபட்டது போல் நம்புதாளை , முகிழ்த்தகம் உள்ளிட்ட ஊராட்சிகளில் தூர்வார நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இதுபற்றி பொதுமக்கள் கூறுகையில் , இந்த பகுதிகளில் கண்மாய்கள் தூர்வாரப்பட்டு பல வருடங்கள் ஆகி விட்டது. தற்போது கண்மாய் முழுவதும் கருவேல மரங்கள் வளர்ந்து மேடாக உள்ளது. இதனால் மழை காலங்களில் தண்ணீரை சேமிப்பதிலும் சிரமம் ஏற்படுகிறது. இந்த நேரத்தில் தூர்வார அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றனர்.

## தடுமாறி நிற்கும் தஞ்சை பூமி: விவசாயிகள் வாழ்வை புரட்டிப்போட்ட வரலாறு காணாத வறட்சி

அழிந்து போன தனது கரும்பு வயலில் விவசாயி கோ.பாலன்

பல்லாயிரம் கோடி ரூபாய் பணத்தை நாட்டின் தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளில் கடனாகப் பெற்று, அதனைத் திருப்பிச் செலுத்தாத இந்திய பெரும் தொழில் அதிபர்களில் ஒருவர் விஜய் மல்லையா. அவர் வெளிநாட்டுக்கு செல்ல இயலாதவாறு நாட்டின் அனைத்து விமான நிலையங்களுக்கும் எச்சரிக்கை நோட்டீஸ் கொடுக்கப்பட்டிருந்தது. ஆனாலும் கூட, அவர் வெளிநாட்டுக்கு தப்பிச் சென்று விட்டார். இந்த செய்தி கடந்த ஆண்டு மார்ச் மாதத்தின் ஒரு நாளில் எல்லா ஊடகங்களிலும் வெளியாகி, நாடு முழுவதும் பரபரப்பாக பேசப்பட்டது.

அந்த செய்தி வெளியான அதே நாளில் சற்று நேரத்தில் இன்னொரு செய்தியும் ஊடகங்களில் வெளியானது. தஞ்சாவூர் மாவட்டம், பாப்பாநாடு அருகேயுள்ள சோழகன்குடிக்காடு என்ற கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கோ.பாலன், விவசாயப் பணிகளுக்காக தனியார் வங்கியிடம் இருந்து வாங்கிய டிராக்டர் கடனின் சில தவணை களைச் செலுத்தவில்லை என்பதற்காக, காவல்

துறையின் உதவியுடன் அடித்து, இழுத்துச் செல்லப்பட்ட காட்சிகள் தொலைக்காட்சி சேனல் களிலும், சமூக ஊடகங்களிலும் வலம் வந்தன.

2011-ம் ஆண்டு வாங்கிய 3 லட்சத்து 80 ஆயிரம் கடனுக்காக, வட்டியுடன் சேர்த்து 2016 மார்ச் வரை ரூ.4 லட்சத்துக்கும் மேல் செலுத்தியிருந்தார் பாலன். மீதம் ரூ.1 லட்சத்து 38 ஆயிரம் மட்டுமே செலுத்த வேண்டும். 2 தவணைகள் மட்டும் அவரால் செலுத்த இயலவில்லை. இதற்காகத்தான் பாலன் மீது இந்த கொடூர தாக்குதல் நடத்தப்பட்டது.

பாலன் மட்டுமல்ல; இவரைப் போலவே வாங்கிய கடனை முறையாக திருப்பிச் செலுத்தி யும் கூட, நெருக்கடிகள் காரணமாக சில தவணைகள் செலுத்த தாமதமாகும்போது பலவிதமான அவமானங்களுக்கு விவசாயிகள் ஆளாகின்றனர். இத்தகைய சூழலில் இருக்கும் விவசாயிகளை தற்போதைய வறட்சி மேலும் கடும் நெருக்கடியில் நிறுத்தியிருக்கிறது.

பாலன் இப்போது என்ன செய்து கொண்டிருக்கிறார் என அறிவதற்காக அவரது கிராமத்துக்குச் சென்றபோது, நாகப்பட்டினம், திருவாரூர் மாவட்ட விவசாயிகளின் வாழ்க் கையைப் புரட்டிப் போட்டுள்ள கடும் வறட்சி தஞ்சை மாவட்ட விவசாயிகளையும் விட்டு வைக்கவில்லை என்பது தெரிந்தது.

தனக்கு ஏற்பட்டுள்ள வறட்சி பாதிப்பு பற்றி பாலன் விவரித்தார். “மூன்று ஏக்கர் நிலத்தில் கரும்பும், ஒன்றரை ஏக்கர் நிலத்தில் நெல்லும் சாகுபடி செய்தேன். ஆழ்துளைகிணற்றில் பதிக்கப்பட்டிருந்த பிளாஸ்டிக் குழாய்கள் உள்வாங்கி விட்டதால், ஆழ்துளைகிணறு மண்ணுக்குள் புதைந்து விட்டது. ஆகவே, ஆற்று நீரை நம்பி மட்டுமே பாசனம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டது. ஆனால் இந்த ஆண்டு ஒருமுறை மட்டுமே ஆற்று நீர் வயலை எட்டிப் பார்த்தது.

ஆக, ஆற்று நீரும் வரவில்லை; நிலத்தடி நீரும் கிடைக்கவில்லை. பக்கத்து வயல்களில் ஆழ்துளைகிணறு வைத்திருப்பவர்கள் உதவியுடன் நெற்பயிரை

மட்டும் ஓரளவு காப்பாற்ற முடிந்தது. 3 ஏக்கரில் இருந்த கரும்பு பயிர் முற்றாக அழிந்து விட்டது. கடந்த ஆண்டு ரூ.5 லட்சம் அளவுக்கு மகசூல் கொடுத்த கரும்பு பயிர், இன்று கண்ணுக்கு எதிரே கருகி கிடக்கிறது. இனி என்ன செய்வது என தெரியவில்லை". கண்களில் விரியும் கவலையுடன் தன் நிலைமையை விவரித்த பாலன், தான் மட்டுமின்றி இந்த பகுதியின் பெரும்பாலான விவசாயிகளின் இன்றைய நிலைமை இதுதான் என்றார்.

அதே சோழகன்குடிக்காட்டைச் சேர்ந்த விவசாயி சி.நல்லதம்பியின் நிலைமையை அறிந்தபோது, சாகுபடியை முற்றாக இழந்து யாருக்கு யார் ஆறுதல் கூறுவது என தெரியாமல் அந்தப் பகுதி விவசாயிகள் தவிப்பதை உணர முடிந்தது.

**பொய்த்தது மழை; பொய்த்தது நம்பிக்கை**

"5 ஏக்கரில் நெல் சாகுபடி; நேரடி விதைப்பு செய்தேன். முளைத்து வந்த பயிர் தொடர்ந்து உயிர் பிழைக்குமா என்ற நிலை தொடக்கத்திலேயே ஏற்பட்டது. அதன்பிறகு ஒருமுறை ஆற்று நீர் வந்தது. அதில் உயிர் பிழைத்த நெற்பயிர் நன்றாகத்தான் வளர்ந்து வந்தது. ஆனால் அதன்பிறகு ஆற்று நீர் வரவேயில்லை. ஆற்று நீர் வராவிட்டாலும் கூட வடகிழக்கு பருவமழை கொஞ்சம் பெய்தாலும் பயிரைக் காப்பாற்றி விடலாம் என நம்பிக்கையுடன் காத்திருந்தேன்.

எனினும் ஏமாற்றம்தான் மிஞ்சியது. பருவமழை பொய்க்கவே, தண்ணீரின்றி பயிர்கள் கருகத் தொடங்கின. பலவிதமான போராட்டங்களுக்கு இடையே 60 நாட்கள் வரை காப்பாற்றிய பயிரை, அதன்பிறகு காப்பாற்ற என்னிடம் எந்த சக்தியும் இல்லை. பயிர்கள் முழுவதும் அழிந்து இப்போது கால்நடைகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன" என்றார் நல்லதம்பி. அவரது வயல் அருகே வளர்ப்பு மீன் குளம் ஒன்று தண்ணீரின்றி காய்ந்து கிடந்தது. அது குறித்து

விசாரித்தபோது, “வறட்சியால் பாதிக்கப்பட்டிருக்கும் இதே நிலம்தான், இந்தப் பகுதியில் மழை, வெள்ளம் வந்தாலும் முதலில் பாதிக்கும் நிலமாக உள்ளது. 2009-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஏற்பட்ட மழை வெள்ளத்தால் இந்தப் பகுதி முழுவதும் நீரில் மூழ்கிக் கிடந்தது. அப்போது நீரில் அழுகி, பயிர்கள் அழிந்து போயின.




மாவட்டத்தின் தலைமடையில் உள்ள கல்லணையைச் சுற்றியுள்ள பகுதியிலேயே வறட்சி கோர தாண்டவம் ஆடுகிறது

ஆண்டுதோறும் வெள்ளத்தால் பாதிக்கப்படும் நிலப்பகுதியாக இருப்பதால், நிலத்தின் ஒரு பகுதியில் குளம் வெட்டி மீன் வளர்க்கலாம் என திட்டமிட்டு, இந்த குளத்தை வெட்டினேன். இப்போது வறட்சியால் நீர் வற்றி வயல் மட்டுமல்ல; இந்தக் குளமும் காய்ந்து கிடக்கிறது. மீன் வளர வேண்டிய குளத்தில் இப்போது மாடுகள் மேய்ந்து கொண்டிருக்கின்றன” என்று நல்லதம்பி தனது வேதனையை வெளிப் படுத்தினார்.

“நெல், கரும்பு மட்டுமல்ல: வறட்சியை தாங்கி நிற்கும் தென்னை மரங்கள் கூட பட்டுப் போகின்றன. நிலத்தடி நீர் அந்தளவுக்கு பாதாளத்துக்கு சென்று விட்டது. இந்த பொங்கல் நேரத்தில் வழக்கமாக 2 ஆயிரம் காய் வெட்டும் எனது தோப்பில், இந்த ஆண்டு 500 காய் கூட கிடைக்கவில்லை” என்றார் ஆர்.கண்ணப்பன் என்ற விவசாயி.

பாப்பாநாடு தேநீர் கடையில் ஆவிடநல்ல விஜயபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஆர்.நாடிமுத்து என்ற விவசாயியை சந்திக்க நேர்ந்தது. “3 ஏக்கர் நெல் நேரடி விதைப்பு செய்தேன். முளைத்த பயிர்கள் கருகி விட்டன. மீண்டும் வயலை உழுதுவிட்டு எள் விதை தெளித்தேன். எள் முளைத்தது. ஆனால் இப்போது அதுவும் இல்லை. வயலில் ஆடு, மாடுகள் மேய்கின்றன. எவ்வளவு நிவாரண நிதி கிடைத்தாலும் எங்களின் வேதனையை தீர்க்க முடியாது.

**வேதனையில் உழலும் உழவர்கள்**

வழக்கமாக இந்த நேரத்தில் அறுவடைக்கு ஆள் கிடைக்காமல் ஊர் ஊராக அலைந்து ஆள் பிடித்து, அறுவடையை முடித்து, நெல்லை வண்டியில் ஏற்றி, அரசின் நேரடி கொள்முதல் மையங்களுக்கு கொண்டு செல்வோம். அங்கு எங்களுக்கும் இரண்டு, மூன்று நாட்களுக்கு முன் நெல்லை கொண்டு வந்தவர்கள் காத்திருப்பார்கள். அவ்வளவு கூட்டத்துக்கு மத்தியில் முட்டி மோதி நெல்லை விற்றுவிட்டு, கையில் பணத்தை வாங்கிக் கொண்டு, அருகேயுள்ள நகரத்துக்கு ஓடி புதுப்பானை, மஞ்சள், கரும்பு, வாழைத்தார் என பொங்கலுக்கான பொருட்களை வாங்கி வந்து உற்சாகமாக உழவர் திருநாளைக் கொண்டாடுவோம்.

இதோ பொங்கல் வந்து விட்டது. ஆனால் வயலில் பயிர் இல்லை. அறுவடையும் இல்லை. நெல் நேரடி கொள்முதல் மையங்களுக்கு வேலையே இல்லை. கையில் காசும் இல்லை. சாகுபடிக்கு வாங்கிய கடனைத் திருப்பித் தர வழியும் இல்லை. கவலையை மறப்பதற்காக ரோட்டு ஓரம் உள்ள டீக்கடையில் இதேபோல் உட்கார்ந்து கொண்டு வருவோர் போவோரை வேடிக்கை பார்த்து கொண்டிருக்கிறோம்” என்று நாடிமுத்து தனது மனதில் உள்ள வேதனையை எல்லாம் வார்த்தைகளாகக் கொட்டினார்.

தஞ்சாவூர் மாவட்டத்தின் கடைமடைப் பகுதிக ளான ஒரத்தநாடு, பட்டுக்கோட்டை, திருவோணம், பேராவூரணி பகுதிகளில் காணும் இடங்களில் எல்லாம் வறட்சியின் தாக்கம் தெரிகிறது.

“மாவட்டத்தின் தலைமடையில் உள்ள கல்லணையைச் சுற்றியுள்ள பகுதியிலேயே வறட்சி கோர தாண்டவம் ஆடுகிறது” என்கி றார், பாலன் உள்ளிட்ட விவசாயிகளுக்காக வழக்குகளை நடத்தி வரும் வழக்கறிஞர் வெ.ஜீவகுமார். “திருப்பந்துருத்தி அருகே ராஜேஸ்கண்ணா, திருக்காட்டுப்பள்ளி அருகே அரவிந்தன் ஆகிய விவசாயிகள் அதிர்ச்சியாலும், தற்கொலை செய்து கொண்டும் உயிரை விட்டிருக்கிறார்கள். கல்லணையை திறந்து விட்டால் அடுத்த சில மணி நேரங்களில் வயலில் தண்ணீர் பாயும் அளவுக்கு மாவட்டத்தின் தலைமடையில் இவர்கள் வயல்கள் உள்ளன. இந்த பகுதியிலேயே வறட்சி எனில், மாவட்டத்தின் மற்ற பகுதிகளில் நிலைமை எப்படி இருக்கும் என்பதை சொல்லத் தேவையில்லை.



ஒரத்தநாடு அருகே சோழகன்குடிக்காட்டில் தனது வயலில் அழிந்து போன நெற்பயிர்களைக் காட்டுகிறார் விவசாயி சி.நல்லதம்பி

நோய்கள் பாதித்தும், முதுமையாலும் உயிரிழப்போரை எல்லாம் விவசாயிகள் மரணம் என்ற பட்டியலில் சேர்ப்பதாக அமைச்சர்கள் சிலர் பேசுகின்றனர். ஆனால் உயிரிழந்த ராஜேஸ் கண்ணாவுக்கு 38 வயது மட்டுமே. அரவிந்தன் 25 வயதைக் கூட தாண்டாதவர். திருப்பனந்தாள் அருகே கீர்த்திகா என்ற பெண் விவசாயி தற்கொலை செய்து கொண்டிருக்கிறார்.

இளம் விவசாயிகளும், பெண் விவசாயி களும் வறட்சியால் மரணத்தைத் தழுவி யிருக்கும் சூழலில், வறட்சியின் தீவிரத்தை உணராமல், விவசாயிகளின் மரணங்களைக் கொச்சைப்படுத்தும் ஆட்சியாளர்களின் போக்கு மிகவும் வேதனை அளிக்கிறது" என்றார் ஜீவகுமார்.

**பன்முனைத் தாக்குதலில் விவசாயிகள்**

மேலும் அவர் கூறும்போது, "இந்த நேரத்தில் கடல் போல் காட்சி அளிக்க வேண்டிய கல்லணை, இந்த ஆண்டு கண்ணுக்கெட்டிய தூரம் வரை விரிந்த மணல்பரப்பாக சகாரா பாலைவனம் போல் காட்சி தருகிறது.

இந்த சூழலில்தான் வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயி, வாங்கிய கடனை எப்படி திருப்பி அடைப்பது என வழி தெரியாமல் தவிக்கிறான். இந்த ஆண்டு கூட்டுறவு வங்கிகளோ, தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளோ விவசாயிகளுக்கு போதிய கடன் வழங்கவில்லை. 90 சதவீதம் பேர் தனியாரிடம்தான் பெரும் வட்டிக்கு கடன் வாங்கியுள்ளனர். சாகுபடி முற்றாக அழிந்த நிலையில், வாங்கிய கடனின் அசலும், வட்டியும் சேர்ந்து கழுத்துக்கு மேல் கத்தியாக தொங்குகிறது. ஊரில் சுய மரியாதையோடு வாழ வேண்டும் என்பதில் உறுதியாக இருப்பவர்கள் விவசாயிகள்.

பயிர்கள் அழிந்ததை விடவும், வாங்கிய கடனைத் திருப்பித் தர முடியாத அளவு தங்கள் சுயமரியாதைக்கு இழுக்கு ஏற்பட்டுள்ளதை தாங்கிக் கொள்ள இயலாமல்தான் தற்போது அவர்கள் தவிக்கிறார்கள்.

இவ்வளவு மோசமான சூழ்நிலையிலும் கூட, விவசாயிகளுக்கு டிராக்டர் கடன் கொடுத்த தனியார் நிதி நிறுவனங்கள், தீவிரமான கடன் வசூல் நடவடிக்கையில் ஈடுபட்டு, விவசாயி களை மேலும் நெருக்கடிக்கு ஆளாக்குவதை ஏற்றுக்கொள்ள முடியவில்லை. ஆகவே, நில வரி உள்ளிட்ட அரசு வசூலிக்க வேண்டிய வரியை ரத்து செய்தால் மட்டும் போதாது. அரசு மற்றும் தனியார் நிதி நிறுவனங்கள் தற்போது விவசாயிகளிடம் எந்த கடன் வசூல் நடவடிக்கையிலும் ஈடுபடக்கூடாது. அதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்." இவ்வாறு விவசாயிகள் எதிர்கொள்ளும் பன்முனைத் தாக்குதல்கள் குறித்து அடுக்கடுக்காய் விவரித்தார் ஜீவகுமார்.

தமிழ்நாட்டின் நெற்களஞ்சியம் என புகழப் பட்ட தஞ்சை பூமி, வரலாறு காணாத கடும் வறட் சியால் இன்று தடுமாறி நிற்கிறது. தஞ்சை தரணி யில் உணவு உற்பத்திக்கு கேடு வருமானால், எதிர்காலத்தில் இந்த நாட்டின் உணவு பாதுகாப்புக்கே அது பெரும் கேடாய் முடியும்.

இந்த ஆண்டு வறட்சியானது பண்டைய நீர்நிலைகளைப் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தியுள்ளது. டெல்டா மாவட்டங்களில் ஆயிரக்கணக்கான குளங்களும், குட்டைகளும், ஏரிகளும் மறைந்து விட்டன. இன்னும் மீதம் இருக்கும் ஏரி, குளம், குட்டை, ஆறு, கால்வாய்களையாவது முழு அளவில் தூர்வாரி, சீர்படுத்த வேண்டும். அவ்வாறு செய்தால் மட்டுமே பல லட்சம் ஏக்கர் சாகுபடி பூமியையும், இந்த மண்ணை நம்பியிருக்கும் லட்சக்கணக்கான விவசாய குடும்பங்களையும் காப்பாற்ற முடியும்.

### புதுச்சேரி வறட்சி மாநிலமாக அறிவிக்கப்படும்: முதல்வர் தகவல்

புதுச்சேரி முதல்வர் நாராயணசாமி நேற்று வெளியிட்ட அறிக்கை:

பருவமழை பொய்த்ததன் விளை வாக ஏற்பட்ட வறட்சியால் புதுச்சேரி, காரைக்கால் பகுதிகளில் விவசாய உற்பத்தி பெருமளவில் பாதிக்கப்பட்டுள்

ளது. காரைக்காலில் சுமார் 4,400 எக்டேர் பரப்பில் பயிரிட்டிருந்த நெல் வறட்சியால் முழுவதும் சேதமடைந்துள்ளது. அதுபோல் புதுச்சேரியில் சுமார் 8,900 எக்டேர் பரப்பில் பயிரிட்டிருந்த நெல், மணிலா, பயறு வகைகள், கரும்பு ஆகியவை பாதிப்புக் குள்ளாகியுள்ளன. அதனால் புதுச்சேரி, காரைக்காலை வறட்சியால் பாதிக்கப் பட்ட பகுதிகளாக அறிவிக்கப்பட உள்ளது. பருவமழை பொய்த்ததால் ஏற்பட்டுள்ள வறட்சியால் பாதிக்கப்பட்ட விவசாயிகளின் இன்னல்களை போக்கும் வகையில் உரிய இழப்பீடு தர உத்தேசிக் கப்பட்டுள்ளது.

விவசாயிகள் செலுத்த வேண்டிய நிலவரி முழுவதையும் தள்ளுபடி செய்ய உத்தேசிக்கப்பட்டுள்ளது. மத்திய குழுவை வரவழைத்து வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளை பார்வையிட செய்து மத்திய அரசிடம் இருந்து கூடுதல் நிதி பெறவும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்துள்ளார்.

தினமணி

**மொச்சைப் பயறு விலையேற்றம்: கிலோ ரூ.60-க்கு விற்பனை**

தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைத் தருணத்தில் மொச்சைப் பயறு விலை அதிகரித்து கிலோ ரூ. 60-க்கு விற்பனை செய்யப்படுகிறது.

மொச்சைப் பயிறு செம்மண் பாங்கான பூமிகளில் விளையக் கூடியது. உடுமலை பகுதியில், ஆண்டிபட்டி, எலையமுத்தூர், தளி, ஜல்லிபட்டி, தும்பலப்பட்டி என மேற்குத் தொடர்ச்சிமலைப் பகுதியை ஒட்டிய நிலங்களிலும், உடுமலையின் வடக்குப் பகுதி கிராமங்களான தாந்தோனி, புக்குளம் உள்ளிட்ட கிராமங்களிலும் மொச்சைப் பயறு சாகுபடி செய்யப்பட்டுள்ளன. மார்கழி மாத இறுதியில் அறுவடை செய்ய விவசாயிகள் திட்டமிட்டிருந்தனர். ஆனால், இந்த

ஆண்டு பருவ மழை ஏமாற்றியதால், காலதாமதமாக பயிரிட்டதால் விளைச்சல் குறைந்துபோனது. வழக்கமாக கிலோ ரூ.15 முதல் 20 வரை விற்கப்படும் மொச்சைப் பயறு தற்போது கிலோ ரூ. 60-க்கு விற்கப்படுகிறது.

இது குறித்து விவசாயிகள் கூறியதாவது:

பொங்கல் பண்டிகையையொட்டி, மொச்சைப் பயறு வரத்து அதிகமாக இருக்கும்.

இதனால், விலையும் குறைவாக இருக்கும். இந்த ஆண்டு பருவ மழை பெய்யாததால் மொச்சைப் பயறு விளைச்சல் பாதிக்கப்பட்டுள்ளது.

இதனால், உடுமலை சந்தை வியாபாரிகள், ஒட்டன்சத்திரம், அன்னூர், புளியம்பட்டி பகுதிகளில் இருந்து மொச்சைப் பயறு கொள்முதல் செய்து, உடுமலையில் விற்பனை செய்து வருகின்றனர்.

இதனால், மொச்சைப் பயறு கிலோ ரூ.60 வரை விற்கப்படுகிறது என்றனர்.

**ஏலத்தில் கொப்பரைத் தேங்காய் விலை உயர்வு**



பரமத்தி வேலூர் சேலம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமையும் கொப்பரைத் தேங்காய் ஏலம் நடைபெற்று வருகிறது. வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்தில் கொப்பரை தேங்காயின் வரத்து குறைந்துள்ளதால், கொப்பரைத் தேங்காயின் விலை உயர்ந்துள்ளது.

பரமத்தி வேலூர் வட்டத்தில் சோழசிராமணி, ஜேடர்பாளையம், அய்யம்பாளையம், பிலிக்கல்பாளையம், கபிலர்மலை, பாண்டமங்கலம், பொத்தனூர், வேலூர், அனிச்சம்பாளையம், பாலப்பட்டி, மோகனூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ஆயிரக்கணக்கான ஏக்கரில் தென்னை பயிர் செய்யப்பட்டுள்ளது.

இங்கு விளையும் தேங்காய்களை உடைத்து, அதன் பருப்புகளை சிறு வியாபாரிகள் வியாழக்கிழமை பரமத்தி வேலூர், வெங்கமேட்டில் உள்ள சேலம் ஒழுங்குமுறை விற்பனை கூடத்துக்குக் கொண்டு வந்து, தரத்துக்கு தகுந்தார்போல் மறைமுக ஏலம் விடப்படுகிறது. கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்துக்கு சுமார் 2,109 கிலோ கொப்பரைத் தேங்காய் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று ரூ.70.50-க்கும், குறைந்த பட்சமாக ரூ.65.89-க்கும், சராசரியாக ரூ.63.39-க்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.1 லட்சத்து 31 ஆயிரத்து 570 ரூபாய்க்கு வர்த்தகம் நடைபெற்றது.

வியாழக்கிழமை நடைபெற்ற ஏலத்துக்கு சுமார் 1,807 கிலோ கொப்பரை தேங்காய் கொண்டு வரப்பட்டிருந்தது. இதில் அதிகபட்சமாக கிலோ ஒன்று ரூ.70.59 பைசாவுக்கும், குறைந்த பட்சமாக ரூ.65.90 பைசாவுக்கும், சராசரியாக ரூ.67.89 பைசாவுக்கும் ஏலம் போனது. மொத்தம் ரூ.1 லட்சத்து 19 ஆயிரத்து 373 ரூபாய்க்கு வர்த்தகம் நடைபெற்றது. கடந்த வாரத்தைவிட இந்த வாரம் கொப்பரைத் தேங்காயின் வரத்து குறைந்திருந்ததால், கொப்பரைத் தேங்காயின் விலை உயர்ந்துள்ளதாக விவசாயிகள் தெரிவித்தனர்.